Annai College of Arts & Science
Quality Education for Today & Tomorrow
Kovilacheri, Kumbakonam. 612 503. Ph: 0435 2453007
Accredited by NAAC with "B" Grade & Recognized by UGC under Section 2(f) & 12(B)
Affiliated to Bharathidasan University, Tiruchirappalli. E-Mail:acasdmn@gmail.com

# தமிழ் உயராய்வுத்துறை

## நோக்கு

தன்னிகரில்லா செந்தமிழ் இலக்கியங்களின் பழம் பெருமைகளையும், சிறப்புகளையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்து ஊக்குவிப்பதோடு அவற்றின் வழி பண்பாடு, கலாச்சாரம் சார்ந்த அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது.

## இலக்கு

மாணவர்களின் பன்முக அறிவையும், தமிழ் இலக்கிய அறிவையும் வளர்ப்பதுடன் அவர்களிடம் காணப்படும் கற்பனைப்படைப்பாற்றல் திறனை வலுப்படுத்துவதுடன் இலக்கிய இலக்கணங்களின் வழியாக அறியலாகும் வாழ்வியல் விழுமியங்களை கண்டுணர்ந்து மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பது.

## தமிழ் உயராய்வுத்துறை

`



**முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்,**

**தமிழ் உயராய்வுத்துறைத் தலைவர்**

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையானது 2003 ஆம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம் (பி.லிட்.,) தொடங்கப்பெற்று இன்றுவரை சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும் துறைக்கு சிறப்புச்சேர்க்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு முனைவர் பட்ட ஆய்வு தொடங்கப்பட்டு தமிழ் உயராய்வுத்துறையாகத் திகழ்கிறது.

2020 ஆம் ஆண்டில் முதுகலைத் தமிழும் (எம்.ஏ.,) தொடங்கப் பெற்று திறம்பட செயல்பட்டு வருகிறது. கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் மூலம் மாணவர்கள் கல்வியறிவில் மேம்பட்டு பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்ச்சி விகிதத்தில் 1 தேர்ச்சிப் பெற்று வருகின்றனர். மேலும், பல்கலைக்கழக தர வரிசைப் பட்டியலில் மாணவர்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றனர்.

தமிழ் உயராய்வுத்துறையில் **பதினைந்து முனைவர்ப் பட்டம் பெற்ற பேராசிரியர்களும்** பல்கலைக்கழக மானியக்ககுழு நடத்திய தேசிய அளவிலான (NET) தகுதித் தேர்வில் மூன்று பேராசிரியர்களும், தமிழ்நாடு அளவில் நடத்திய (SET) கல்லூரிப் பேராசிரியர்களுக்கான தகுதித் தேர்வில் மூன்று பேராசிரியர்களும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

**பேராசிரியர்கள் பெற்ற விருதுகள்**

- **மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம்**

சார்பில் கும்பகோணத்தில் நடைபெற்ற நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் விழாவில் **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** , **முனைவர் மா. புகழேந்தி , பேராசிரியர் சு. சோமசுந்தரம் , முனைவர் இரா. தமிழ்செல்வி** மற்றும் **முனைவர் இரா. கலையரசி** ஆகிய ஐந்துபெரும் **பேராசிரியர் பெருந்தகை** விருதினைப் பெற்றுள்ளனர்.

- **நிமிர் மாற்று சாதனையாளர் விருது - 2021**

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய டாக்டர் **கா. அன்பழகன்** அவர்களிடம் சிறந்த கல்விப்பணி மற்றும் சமுகப்பணியைப் பாராட்டி **பேராசிரியர் பெருந்தகை** விருதை **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** , **முனைவர் மா. புகழேந்தி** , **பேராசிரியர் சு. சோமசுந்தரம் , மற்றும் முனைவர் இரா. கலையரசி** ஆகியோர் பெற்றுள்ளனர்.

- **நாமக்கல் கவியரசர் தமிழ் சங்க விருது**

நாமக்கல் கவியரசர் தமிழ் சங்கம் நடத்திய சுதந்திர விழாவில் பேராசிரியர் **முனைவர் சா. ஜெகன் அண்டோ திலக்** அவர்கள் ‘**கவிஞானி விருது**’ பெற்றுள்ளார்.

- **குறிஞ்சி தமிழர் தமிழ் சங்க விருது**

குறிஞ்சி தமிழர் தமிழ் சங்கம் சார்பில் நடைபெற்ற கலை இலக்கியப் போட்டியில் நூற்றுக்கும் மேலான மாணவர்களை ஒருங்கிணைத்து கலந்துகொள்ள ஊக்கப்படுத்திய கல்வித் தொண்டினைப் பாராட்டி **சாதனைச் செம்மல் விருதினை** குறிஞ்சி தமிழர் தமிழ் சங்கம் பேராசிரியர் **முனைவர் சா. ஜெகன் அண்டோ திலக்** அவர்களுக்கு வழங்கி பாராட்டியுள்ளது.

- **மருதம் பேராசிரியர் சிகரம் விருது**

முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்,

முனைவர் மா. புகழேந்தி,

முனைவர் இரா. கலையரசி,

பேராசிரியர் சு. சோமசுந்தரம்

- **நற்றமிழ் ஆசான் விருது**

முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்,

முனைவர் மா. புகழேந்தி,

முனைவர் மா. செந்தில்குமார்

முனைவர் இரா. கலையரசி,

பேராசிரியர் சு. சோமசுந்தரம்

- **தகைசார் பேராசிரியர் விருது**

முனைவர் மா. புகழேந்தி

## கருத்தரங்கில் சிறப்பு விருந்தினர்களாக பங்குபெற்ற பேராசிரியர்கள்

அன்னை கல்வியியல் கல்லூரி மற்றும் அன்னை பாத்திமா கல்லூரி இணைந்து நடத்திய உலக மகளிர் தின விழாவில் தமிழ் உயராய்வுத்துறைத் தலைவர் **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு **மகளிர் முன்னேற்றப் பாதைகள்** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இணைய வழியில் நடைப்பெற்ற பன்னாட்டு அளவில் **கலந்துரையாடுவோம் சிந்தனைக்களம்** பகுதியில் பேராசிரியர் **முனைவர் மா. புகழேந்தி** அவர்கள் சிறப்பு விருந்தினராக

கலந்துகொண்டு **அவன் - அது - அவள்** (மூன்றாம் பாலின முகவரி ) என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கியுள்ளார்.

இணைய வழியில் நடைப்பெற்ற பன்னாட்டு அளவிலான **கலந்துரையாடுவோம் சிந்தனைக்களம்** பகுதியில் பேராசிரியர் **முனைவர் இரா. கலையரசி** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு **கதை சொல்லி தென்கச்சி கோ சுவாமிநாதன்** எனும் தலைப்பில் சிறப்புரை வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு அனைத்து கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக சார்பில் நடைபெற்ற மகளிருக்கான விழாவில் தமிழ் உயராய்வுத்துறைத் தலைவர் **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு **இன்றைய பெண்கள் முனேற்றம் - ஒரு பார்வை** என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கியுள்ளார்.

**ஆர்.டி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்** நடைப்பெற்ற ஐம்பெரும் விழாவில் **மாணவர்களின் எதிர்கால கனவு** என்ற பொருண்மையில் **முனைவர் மா. புகழேந்தி** சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்.

**அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் பாரதிதாசன் பல்கலைக் கழகமும்** இணைந்து நடத்திய **தூய்மைக்காக இளைஞர்கள்** என்னும் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமில் **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு **பெண்கள் பாதுகாப்பு** என்னும் பொருண்மையில் சிறப்புரையாற்றினார்.

## தமிழ் உயராய்வுத்துறையின் செயல்திறன்கள்

தமிழ் உயராய்வுத்துறை ஆண்டுதோறும் தமிழ் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பயனடையும் வகையில் **பன்னாட்டுக் கருத்தரங்கம்**, **தேசியக் கருத்தரங்கம்** மற்றும் **தேசியப் பயிற்சிப் பட்டறையைத்** திட்டமிட்டு நடத்தி வருகிறோம்.





## நுண்கலை விழா

ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் **நுண்கலைத்திறன் போட்டிகள்** விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் **பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, கையெழுத்துப்போட்டி** மற்றும் **ஓவியப்போட்டி** என பல்வேறு தலைப்புகளில் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதில் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுகளையும் பள்ளிகள் சுழல் கேடயத்தையும் வென்றனர்.




## வேள்வி இலக்கிய வட்டம்

மாணவர்களின் பன்முக சிந்தனையை வெளிக்கொணரும் வகையில் மாதம் இருமுறை **வேள்வி இலக்கிய வட்டம்** நடத்தப்படுகிறது. இதில் **பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி, நாடகப்போட்டி, பட்டிமன்றம், விவாதமேடை, வார்த்தை விளையாட்டு** மற்றும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டும், பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருகிறது.






## வளர்பிறை முற்றம்

**படைப்புகள் திறனாயப்படும் திறனாய்வுகள் படைக்கப்படும்** என்பதன் நோக்கில் **வளர்பிறை முற்றம்** நடத்தப்பட்டு வருகிறது. இதில் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் பிற துறை சார்ந்த நூல்கள் குறித்து வாசிப்புத் திறனையும் சிந்தனைத் திறனையும் வெளிப்படுத்தும் நோக்கிலும் இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.




## ஆய்வாளர் பூங்கா

ஆய்வாளர் பூங்கா திறன் வளர் பயிற்சியின் மூலம் மாணவர்களின் திறனாய்வை மேம்படுத்தும் வகையில் சிறுகதை, புதினங்கள் மற்றும் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுத்தலைப்புகள் கொடுக்கப்பட்டு, தாமே திறனாய்வு செய்து கட்டுரை வடிவில் எழுதும் அளவிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.




## பைந்தமிழ் கவியரங்கம்

தமிழ் உயராய்வுத்துறை சார்பில் கல்லூரி மாணவர்களின் கவித்திறனை மேம்படுத்தும் வகையில் கிறுக்கல்களை கவிதையாக்கும் முயற்சியில் மாதந்தோறும் **பைந்தமிழ் கவியரங்கம்** என்ற அமைப்பின் மூலம் **கவிதைபோட்டி** நடத்தப்பெற்று, வெற்றி பெறுவோருக்கு பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.







## சிந்தனையாளர் மன்றம்

மாணவர்களுக்கு புதிய சிந்தனையைத் தூண்டும் வகையில் வாரந்தோறும் வியாழக்கிழமைதோறும் **சிந்தனையாளர் மன்றம்** நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் தங்களுக்கு படித்ததில் பிடித்த

நூல்கள் மற்றும் பொதுதலைப்புகளை தேர்ந்தெடுத்து, அதன் தொடர்பான கருத்துகளை கலந்துரையாடும்போது அவர்களின் மன உறுதியும் பேசும் திறமையும் வளப்படுத்தப்பட்டு வருகிறது.



## புரிந்துணர்வு ஒப்பந்தம்

**தமிழ் உயராய்வுத்துறை** மற்றும் **ஏடகம் கல்வி சமூக** மற்றும் **ஆய்வு மையம்** இணைந்து **சுவடியியலும் ஆவணங்களும்** என்ற பொருண்மையில் **புரிந்துணர்வு ஒப்பந்தம்** இரு நிறுவனங்களுக்கு இடையில் பரிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.




தமிழ் உயராய்வுத்துறை மற்றும் **கோயம்பத்தூர் அனலி கலை இலக்கியப்பள்ளி** இணைந்து **நாடகம், சிறுகதை, கவிதை, வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர், இதழியலாளர் பயிற்சியும் பயிற்சி பட்டறையும்** நடத்துவதற்கு இரு நிறுவனங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டு செயல்பட்டு வருகிறது.






## வாழ்க்கை வழிகாட்டல் நிகழ்ச்சி


உயர்கல்வியின் மேம்பாடுகள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கி வருகிறோம். தமிழ்உயராய்வுத் துறைத்தலைவர் **முனைவர் ஜே. லொயோலா பீரிஸ்** மற்றும் **பேராசிரியர் சு. சோமசுந்தரம்** ஆகியோர் தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று பள்ளி மாணவர்களுக்கான **வாழ்க்கை வழிகாட்டல்** நிகழ்ச்சிகள் மூலம் கருத்துரை வழங்கி வருகின்றனர்.

மேலும் துறைப்பேராசிரியர்கள் **நாட்டு நலப்பணித்திட்டம்**, **ஒழுங்கு நடவடிக்கை குழு**, **லியோ கிளப்**, **ரோட்ராக்ட் கிளப்**, **பெண்கள் நல சங்கம்**, **பேராசிரியர் ஒருங்கிணைப்புச் சங்கம்**, **மாணவர் ஆதரவு குழு** ஆகியவற்றிலும் திறம்பட செயல்பட்டு வருகின்றனர்.

## முன்னாள் மாணவர் சங்கம் :

**தமிழ்உயராய்வுத்துறையில் முன்னாள் மாணவர் சங்க கூட்டம் ஆண்டுதோறும் சனவரியில் நடைபெற்று வருகிறது . இக்கூட்டத்தில் முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்டு தாங்கள் கல்லூரியில் பயின்ற காலத்தின் நினைவலைகளையும், தற்போது கல்லூரி மற்றும் துறை பெற்றுள்ள வளர்ச்சி நிலைகளையும் மேலும் துறையின் முன்னேற்றத்திற்கான வழி முறைகளைப் பற்றியும் கலந்துரையாடினர். தங்கள் குடும்பத்தினரோடு வந்திருந்து அலாவி மகிழ்ந்தனர். இறுதியாக மரக்கன்று நட்டுமகிழ்ந்தனர்.**






## முதுகலைத்தமிழ்

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் உயராய்வுத்துறை முதுகலைப் பிரிவானது 2020 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு மாணவர்கள் பயின்று வருகின்றனர். **வேள்வி இலக்கிய வட்டம், ஆய்வாளர் பூங்கா, வளர்பிறை முற்றம்** வழியாக முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்களின் ஆளுமைத் திறனையும், ஆய்வுத் திறமையும் வெளிக்கொணரும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## முனைவர்ப் பட்ட ஆய்வு

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் உயராய்வுத்துறை முனைவர்ப் பட்ட ஆய்வானது 2015 ஆம் ஆண்டு சனவரியில் துவங்கப்பட்டு மூன்று ஆய்வு நெறியாளர்களோடும் ஆய்வு மாணவர்களோடும் செயல்பட்டு வருகிறது. முதல் ஆய்வு மாணவரான மா. செந்தில்குமார் அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே மாதம் முனைவர் பட்டம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்வோடு தெரிவித்துகொள்கிறோம். மேலும், ஆய்வாளர்கள் தங்களுக்கு எழும் ஐயங்களைத் தெளிவுப்படுத்திக் கொள்ளவும் புதிய சிந்தைகளை வளர்த்துக் கொள்ளவும் முனைவர்ப் பட்ட ஆய்வாளர்களுக்கு சிறந்த தனித்திறன் மிக்க பேராசிரியர்களைக் கொண்டு கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

| வ. எண் | ஆய்வு நெறியாளர் | மாணவர் | ஆய்வு தலைப்பு | கல்வி ஆண்டு | முனைவர் பட்டம் பெற்ற ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1 | முனைவர் ச. ஆதிசக்தி | மா. செந்தில் குமார் **(REF.NO. 3674/Part Time Jan 2017)** | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் ஒரு திறனாய்வு | 2017-2022 | மே-2021 |
| 2 | முனைவர் இரா. செந்தில் | பி. சீதாதேவி **(REF.NO. BDU2210632780146/ Full Time 08.08. 2022 to 07.08.2027)** | லக்ஷ்மி படைப்புகளில் பெண்கள் | 2022-2027 | - |

## தமிழ் உயராய்வுத்துறை

## தமிழ் உயராய்வுத்துறைப் பேராசிரியர்கள்

1. முனைவர் ஜே. லொயோலா பீரிஸ், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

2. முனைவர் மா. புகழேந்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பி.எச்.டி.,நெட்

3. முனைவர் மா. செந்தில்குமார், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பி.எச்.டி.,

4. பேராசிரியர் சு. சோமசுந்தரம், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,(பி.எச்.டி,)செட்

5. முனைவர் இரா. தமிழ்செல்வி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,செட்

6. முனைவர் இரா. கலையரசி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பி.எச்.டி.,செட்

7. முனைவர் ச. ஆதிசக்தி, எம்.ஏ.,எம்.ஏ.,(மொழி).,எம்.ஃபில்.,பி.எச்.டி.,பி.எட்.,நெட்

8. முனைவர் இரா. செந்தில், எம்.ஏ.,எம்.ஏ., எம்.ஃபில்.,பி.எச்.டி.,நெட்

9. முனைவர் பி. நிர்மலா, எம்.ஏ.,எம்.ஃபில்., பி.எச்.டி.,

10. முனைவர் சா. ஜெகன் அண்டோ திலக், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

11. பேராசிரியர் வ திருமுருகன், எம்.ஏ.,எம்.ஃபில்.,

12. பேராசிரியர் அ. பிரதீபா நிவாஞ்சலின், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

13. முனைவர் நா. அய்யம்பெருமாள், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

14. முனைவர் எஸ். அன்புசெழியன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

15. முனைவர் பி. சாந்தி, டி.பி.டி., எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

16. முனைவர் பா. ஜெனிபாராணி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

17. முனைவர் து. இலங்கேஸ்வரி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

18. பேராசிரியர் சோ. விஜயலட்சுமி, எம்.ஏ.,எம்.ஃபில்.,

19. பேராசிரியர் ஜெ. விமலா, எம்.ஏ.,எம்.ஃபில்.,

20. முனைவர் வி. விஜி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,

21. பேராசிரியர் முத்துலெட்சுமி, எம்.ஏ.,எம்.ஃபில்.,

22. பேராசிரியர் ராபர்ட் பூத், எம்.ஏ.,எம்.ஃபில்.,

23. பேராசிரியர் அ. இந்திரப் பிரியா, எம்.ஏ.,டி.பி.டி.,பி.பி.டி.,

## தமிழ்த்துறைக் கருத்தரங்கம் 2011-2021

| வ.எண் | நாள் | தலைப்பு | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|
| 1 | 09.08.2011 | இலக்கிய இன்பம் | **முனைவர் பேரா. கோ.ப.** நல்லசிவம், மெய்யியல்துறை, தமிழ்ப் பல்லைக்கழகம், தஞ்சாவூர். |
| 2 | 25.8.2011 | நிகழ்கால புதுக்கவிதைகளில் மனித உரிமைகள் | **பேராசிரியர் கவிஞர் கனல்மைந்தன்** |
| 3 | 05.07.2012 | மனித உரிமைகளும் உலக அரசியல் நிகழ்வுகளும் | **இரா. இராசீவ்காந்தி,** வழக்குரைஞர், உயர்நீதிமன்றம், சென்னை. |
| 4 | 20.02.2003 | தாய்மொழிவழிக் கல்வியே தகுதியை வளர்க்கும் | **அரிகரசுதன்,** காட்சி தொடர்பியல், துறைத்தலைவர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம். |

| | | | |
|---|---|---|---|
| 5 | 20.03.2013 | தமிழர் வழிபாட்டில் அய்யனார் | **திரு. மு. இ. ஹிமாயூன்,** செயலர், அன்னை கல்விக் குழுமம். |
| 6 | 24.02.2014 | செவ்வியல் இலக்கியங்கள்-ஒரு பொதுப்பார்வை | **முனைவர் வெ. மதியரசன் எம்.ஏ.,எம்.ஃ.பில்.,பிஎச்டி.,** தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, நாகப்பட்டினம். |
| 7 | 17.06.2014 | இலக்கிய மன்ற விழா | **முனைவர் ச. மணி,** முன்னாள் முதல்வர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கும்பகோணம். |
| 8 | 21.07.2014 | காப்பியங்களில் அறக் கருத்துக்கள் | **முனைவர் திருமதி.** ஜெயஸ்ரீ, அரசு மகளிர் கல்லூரி, கும்பகோணம். |
| 9 | 30.08.2014 - 31.08.2014 | யோகா பயிற்சி பயிலரங்கம் | **முனைவர் கோ. லேனின்,** உதவிப் பேராசிரியர், தத்துவம் சமயம் மற்றும் பண்பாட்டுத்துறை, பூன்புகார் கல்லூரி |
| 10 | 26.12.2014 | சங்க இலக்கியத்தில் அகழாய்வு | **முனைவர் ந. பாஸ்கரன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்-1. |
| 11 | 13.04.2015 | முத்தமிழ் விழா-2015 | **புலவர் முத்து முருகேசன், எம்.ஏ.,எம்.ஃ.பில்.,எம்எட்.,** முதல்வர், அன்னை பாத்திமா கல்வியியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம். |
| 12 | 07.07.2015 | இரசனையில் தேர்ச்சிகொள் | **பேரா. முனைவர் தெ. வெற்றிச்செல்வன்,** அயல்நாட்டுகத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்லைக்கழகம், தஞ்சாவூர். |
| 13 | 02.01.2016 | சிந்தனையில் அறிஞர்களும் கோட்பாடுகளும் | **முனைவர் அரங்க சுப்பையா,** முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர். |
| 14 | 30.09.2016 | யோகா பயிற்சி பயிலரங்கம் | **முனைவர் கோ. லேனின்,** உதவிப் பேராசிரியர், தத்துவம் சமயம் மற்றும் பண்பாட்டுத்துறை, பூன்புகார் கல்லூரி, யோகா செய்முறைப் பயிற்சி |
| 15 | 01.02.2017 | தமிழில் சிற்றிலக்கியங்கள் | **முனைவர் மு. அருணகிரி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திரு.வி.க கல்லூரி, திருவாரூர். |

| | | | |
|---|---|---|---|
| 16 | 1902.2017 | கல்லெலுத்து-கற்றல் கற்பித்தல் | **முனைவர் கோ**. கண்ணதாசன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜிக் கல்லூரி, தஞ்சாவூர். |
| 17 | 21.02.2017 | சொல் இலக்கணக் கோட்பாடுகள் | **கு. சந்திரசேகரன்,** தமிழ் ஆய்வியல் துறைத்தலைவர், மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாத்தனூர். |
| 18 | 31.07.2017 | காப்பியக் கதைமாந்தர்களின் மாண்பு | **முனைவர் த. இளஞ்செழியன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜிக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். |
| 19 | 28.08.2017 | கவிதை வெளியீட்டில் உத்திகளும் போக்குகளும் | **பேரா. ஜெ. சந்திரகலா,** உதவிப் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. |
| 20 | 29.09.2017 | யோகா பயில்ரங்கம் மற்றும் ஆசனப்பிரணயாமம் | **T. கோவிந்தராசன்,** துணைப் பேராசிரியர், மனவளக் கலைமன்றம், கும்பகோணம். |
| 21 | 30.01.2018 | தமிழின் தொன்மைகள் | **முனைவர் மு. அருணகிரி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திரு.வி.க கல்லூரி, திருவாரூர். |
| 22 | 30.01.2018 | தமிழ்க் கையெழுத்து இயக்கம் | **முனைவர் மு. அருணகிரி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திரு.வி.க கல்லூரி, திருவாரூர். |
| 23 | 25.07.2018 | அற இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் நெறிகள் | **பேரா. ஜெ. மகேஷ்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பிரிஸ்ட் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| 24 | 16.08.2018 | யோகா மனஅழுத்த மேலாண்மை | **திரு. என். கணேசன்,** யோகா மாஸ்டர், மாயவரம். |
| 25 | 27.09.2018 | இனிக்கும் இலக்கணம் | **முனைவர் ச. திருஞானசம்பந்தன்,** மேனாள் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசர் கல்லூரி, திருவையாறு. |

| | | | |
|---|---|---|---|
| 26 | 30.09.2019 | மாநில அளவிலான தமிழ் கையெழுத்துப்போட்டி | **முனைவர் சீ. பொ. மாணிக்கவாசுகி**, முதல்வர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கும்பகோணம். |
| 27 | 17.12.2019 | பழம்பொருள்கள் கண்காட்சி | **முத்தையா,** குடந்தை தொல்லியல் நாணயவியல் கழகம், கும்பகோணம். |
| 28 | 20.12.2019 | நம்மை நாமறிவோம் | **முனைவர் மன்னை க.** இராஜகோபாலன், இலக்கியச் சொற்பொழிவாளர், சிங்கப்பூர். |

| | | | |
|---|---|---|---|
| 29 | 15.06.2020 | சிற்றிலக்கியங்களில் பன்முகப் பார்வை ஏழுநாள் இணையவழி தேசியக் கருத்தரங்கம் | **1. முனைவர் சு.சதீஷ்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ராக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பெரம்பை, வில்லியனூர் அஞ்சல், புதுச்சேரி.<br>**2. ஆ. பூபாலன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, லட்சுமி பங்காரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேல்மருவத்தூர்.<br>**3. முனைவர் தி.உமாதேவி**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியத்துறை தில்லிப் பல்கலைக்கழகம்,புதுதில்லி.<br>**4. முனைவர் வாசுகி ஜெயரத்தினம்,** தமிழ்த்துறைப்பேராசிரியர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.<br>**5. முனைவர் ஆர்.விஜயராணி**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.<br>6. **முனைவர் செ.காளிமுத்து,** இணைப்பேராசிரியர், துறைத்தலைவர், தமிழாய்வுத்துறை, அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.<br>**7. முனைவர் ந.குப்புசாமி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை. |
| 30 | 29.12.2020 | பாரதிதாசன் பாடல்களில் சமூக அரசியல் பண்பாட்டு வெளிப்பாடுகள் | **பேரா. முனைவர் மார்க்ஸ்,** எழுத்தாளர், சென்னை. |
| 31 | 21.02.2021 | உலகத் தாய்மொழி தினம் | **முனைவர் ஜெயச்சந்திரன்,** உதவிப் பேராசிரியர், அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம். |

| | | | |
|---|---|---|---|
| 32 | 14.06.2021<br>,<br>16.06.2021 | தமிழ் இலக்கியங்களில் மருத்துவம்<br>1.அவிழ்தமும் அமிழ்தமும்<br><br>2.இலக்கிய மரபும் நாட்டு மருத்துவமும்<br><br>3.இயற்கை மருத்துவ சித்தாந்தங்கள் | 1. **மரு பாலசுப்பிரமணியன் வீரபுத்திரன்(BSMS),** முதுகலை அறிவியல் (மருத்துவ இடல் செயலியல்), எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம், சென்னை.<br><br>2. **முனைவர் ஜே.சம்பத்குமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை.<br><br>3. **மரு.நந்தினி வி. மோகன் BNYS,** உதவிப்பேராசிரியர் மற்றும் உதவி அலுவலர், அன்னை இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, கும்பகோணம். |
| 33 | 30.07.2021 | கொரோனாவால் விளைந்த கலைகள் | - |
| 34 | 08.09.2021 | சர்வதேச எழுத்தறிவு தினம் | - |
| 35 | 29.09.2021 | மன அழுத்தம் போக்கும் யோகா பயிற்சி | **மரு.நந்தினி வி. மோகன் BNYS**, உதவிப்பேராசிரியர் மற்றும் உதவி அலுவலர், அன்னை இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, கும்பகோணம். |
| 36 | 13.12.2021 | சுவடியியலும் ஆவணங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் | **த.ம. சரபோஜி** என்கிற **மணி. மாறன்,** தமிழ்ப்பண்டிதர், ஏடகம் கல்வி சமூக மேம்பாடு மற்றும் ஆய்வு மையம், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 37 | 28.12.2021<br>-<br>29.12.2021 | புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் நாடகப் பயிற்சி பட்டறை | **முனைவர் ல. பினுகுமார்** ஒருங்கிணைப்பாளர், அனலி இலக்கியப் பள்ளி. |